என்று சொல்கிறார். காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய நண்பரவர்கள்கூட மத்திய சர்க்கார் இதற்கு உதவி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் உதவியிலும் நிதிக் கமிஷன் சார்பில் ''நான்-பிளானிங்'' எக்ஸ்பெண்டிச்சர்'' என்ற வகையில் திட்டம் சாராச் செலவுகளுக்காக நிதிக் கமிஷன் நாம் கூறுகின்ற தொகையில் 'கேப் விழும் தொகையைச் சரிக்கட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அதையும் நாம் பயன்படுத்தி என்.ஜி. ஓக்களுடைய கோரிக்கைகளைத் தீர்க்க முனைந்து முன் வரலாம். அதையும் ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இல்லை.

இப்படிப்பட்ட கடுமையான நிலைமைகள் நாட்டிலே ஏற்பட்டு, பத்திரிகைகளிலே வருகின்ற நேரத்தில் மிக நெருக்கடி, பயங்கரம் தமிழ்நாட்டிலே உருவாக இருக்கிறது என்ற திகில் நிறைந்த சூழ்நிலை இருக்கிற இந்த நிலைமையிலும்கூட இவைகளைப்பற்றி விவாதிக்க அல்லது கருத்துக்களை அறிவிக்க முதலமைச்சர் இந்த அவைக்கு வராமல் இருப்பதும் மற்றுமொரு வருந்தத்தக்க நிலையாகும் என்பதையும் எடுத்துக் கூறி, என்.ஜி.ஓக்களுக்கு மட்டுமல்லாமல் எதிர்க்கட்சிகளுக்குத் தந்த வாக்குறுதியும் மீறப்பட்டிருக்கின்ற காரணத்தால் எங்கள் கட்சியின் சார்பாக நாங்களும் வெளிநடப்பிலே ஈடுபடுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்).

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர் பதவி புரிய வேண்டி தலைமைச் செயலகத்திற்கு முன்பு நடக்க இருக்கும் உண்ணா நோன்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

''இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தினால் இடப்பட்ட பதவி இறக்க ஆணையை நீக்கி, பதவி உயர்வு அளிக்கப்பட்ட நாளிலிருந்து பதவி இறக்கம் செய்யப்பட்ட 13 தமிழ் ஆசிரியர்களையும் தொடர்ந்து தமிழாசிரியர் பணி புரிய உடனடியாக ஆணையிட வேண்டி 6—3—1978 முதல் தலைமைச் செயலகத்திற்கு முன்பு உண்ணா நோன்பு இருக்க இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. ஆர். கிருஷ்ணன், திரு. எம். அண்ணாமலை, திரு. என். பழனிவேல், திரு. சோ. பாலகிருணஷ்ன், திரு. செ. சிவசாமி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

 இராமநாதபுரம் மாவட்டத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர் பதவிபுரிய வேண்டி தலைமைச் செயலகத்திற்கு முன்பு நடக்கவிருக்கும் உண்ணா நோன்பு குறித்து

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்மாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருக்கையில் இல்லை. ஆகவே, தள்ளப்படுகிறது.

(4) அமைச்சரின் அறிக்கைகள்.

(அ) 9—1—78-ம் நாளன்று ஒரு துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ (1) விதியின்கீழ் ஓர் அறிக்கை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ(1) விதியின்கீழ் அவைக்கு ஓர் அறிக்கை அளிக்கின்றேன்.

9—1—1978 அன்று சட்டமன்ற குறுகிய கால வினா எண். 1 விடையளிக்கப்பட்டது. அப்போது உறுப்பினர் திரு. கிட்டப்பா வினால் எழுப்பப்பட்ட துணை வினா ஒன்றுக்கு விடையளிக்கையில் ஊராட்சி ஒன்றிய குழுக்களை அமைக்க வேண்டுமென்று கடந்த 29-ம் தேதி டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதே போல், நகராட்சி மன்றங்களுக்கும் இப்படி ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும் 31-ம் தேதி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினேன். நகராட்சியைப் பொறுத்த அளவில் அரசு ஆணை 29—12—1977-ல் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அது நிறுத்தி வைக்கப்பட்டு திருத்தப்பெற்ற ஆணையாக 8—2—1978-ல் பிறப்பிக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(5) கவன ஈர்ப்பு.

முதுகுளத்தூர் தாலூகா, சாயல்குடி கிராமம், காந்திநகர், வி. வி. ஆர் காலனியில் வீடுகள் தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட சேதம் குறித்து.